©
தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 0.80 பைசா

# தமிழ்நாடு அரசின் அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 349] சென்னை, சனிக்கிழமை, அக்டோபர் 28, 2017

ஐப்பசி 11, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு –2048

## பகுதி III – பிரிவு 1 (அ)

**தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொதுச் சட்ட விதிமுறைகள், அறிவிக்கைகள், ஆணைகள், ஒழுங்குமுறை விதிகள், இன்னபிற**

**அரசின் அறிவிக்கைகள்**

**வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017 ல் திருத்தம்

*[அ.ஆ. நிலை. எண். 151, வணிகவரிகள் மற்றும் பதிவு (ஆ1) , 27 அக்டோபர் 2017,*

*ஐப்பசி 10, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். எஸ்ஆர்ஓ அ–46(i)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017 ன் 19 இல்) பிரிவு 164–ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017 ஐ மேலும் திருத்த பின்தொடரும் விதிகள் தமிழ்நாடு ஆளுநரால் இதன் மூலம் ஏற்படுத்தப்படுகிறது. அதாவது,

**(1)** இந்த விதிகள், இனி தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (9வது திருத்தம்) விதிகள் 2017 என அழைக்கப்படும்.

**(2)** இந்த அலுவல் சார்ந்த அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியில் இருந்து அவை நடைமுறைக்கு வரும்.

2. தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017–ல்

(i) விதி 24 ன், உப விதி (4) ல் “2017 அக்டோபர் 31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ ” என்ற வார்த்தைகள், எண்ணிக்கைகள் மற்றும் எழுத்துகளுக்கு “2017 டிசம்பர் 31 அன்றோ அல்லது

அதற்கு முன்னரோ'' என்ற வார்த்தைகள், எண்ணிக்கைகள் மற்றும் எழுத்துகள் மாற்றீடு செய்யப்பட வேண்டும்.

(ii) விதி 45ன், உப விதி (3) ல் ''கூறப்பட்ட காலாண்டிற்கு அடுத்து வருகின்ற'' என்ற வார்த்தைகளுக்கு பிறகு ''அல்லது இதுபோன்ற காலத்திற்குள் மேலும் இருக்கலாம் என இது சார்பாக ஆணையரால் ஒரு அறிவிக்கை மூலம் நீட்டிக்கப்படலாம்.

இருப்பினும் மத்திய வரி ஆணையரால் அறிவிக்கப்படும் எந்த ஒரு காலவரம்பு நீட்டிப்பும் ஆணையரால் அறிவிக்கப்படுவதாக கருதப்படும்'' என்பவை இடை சேர்க்கப்பட வேண்டும்.

(iii) விதி 96ன், உப விதி (2) ல் பின்தொடரும் காப்புரைகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும். அதாவது,

இருப்பினும் சட்டப்பிரிவு 37ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைபடுத்தி ஒரு வரிக் காலத்திற்கான படிவம் ஜி.எஸ்.டி.ஆர்–1 ன் வெளி வழங்கல் விவரங்களை கொடுப்பதற்கான எந்த ஒரு தேதியையும் நீட்டிக்கவும் ஒரு வழங்குநரால் படிவம் ஜி.எஸ்.டி.ஆர்–3B படிவத்தினை அளிக்கப்பட்ட பிறகு ஜி.எஸ்.டி.ஆர்–1 அட்டவணை 6 A ல் குறிப்பிட்டவாறு ஏற்றுமதி தொடர்பான விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும் மேலும் சுங்கத்துறையால் நியமிக்கப்பட்ட அமைப்பில் உள்ள பொது வலைவாயிலில் அவை மின்னணு முறையில் பரிமாற்றம் செய்யப்படும்.

இருப்பினும் முதல் காப்புரையின் கீழ் அட்டவணை 6A –ல் கொடுக்கப்பட்ட தகவலானது மேலும் அந்த வரிகாலத்திற்கான படிவம் ஜி.எஸ்.டி.ஆர்–1 ல் தானாகவே வரைவெடுக்கும்.

(iv) விதி 96அ–ன், உப விதி (2) ல் பின்தொடரும் காப்புரைகள் இடைச்சேர்க்கப்பட வேண்டும். அதாவது,

இருப்பினும் சட்டப்பிரிவு 37ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைபடுத்தி ஒரு வரிக் காலத்திற்கான படிவம் ஜி.எஸ்.டி.ஆர்–1 ன் வெளி வழங்கல் விவரங்களை கொடுப்பதற்கான எந்த ஒரு தேதியையும் நீட்டிக்கவும் ஒரு வழங்குநரால் படிவம் ஜி.எஸ்.டி.ஆர்–3B படிவத்தினை அளிக்கப்பட்ட பிறகு ஜி.எஸ்.டி.ஆர்–1 அட்டவணை 6 A ல் குறிப்பிட்டவாறு ஏற்றுமதி தொடர்பான விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும் மேலும் சுங்கத்துறையால் நியமிக்கப்பட்ட அமைப்பில் உள்ள பொது வலைவாயிலில் அவை மின்னணு முறையில் பரிமாற்றம் செய்யப்படும்.

இருப்பினும் முதல் காப்புரையின் கீழ் அட்டவணை 6A –ல் கொடுக்கப்பட்ட தகவலானது மேலும் அந்த வரிகாலத்திற்கான படிவம் ஜி.எஸ்.டி.ஆர்–1 ல் தானாகவே வரைவெடுக்கும்.

முனைவர். ச.சந்திரமௌலி,
அரசின் கூடுதல் தலைமை செயலாளர் (முகூபொ).